அளவில்லா அருளாளன், இணையில்லா அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்...

திருச்சி–8

ஹிஜ்ரி. 14.11.28

ஈ.: 23.11.07

ஜமாஅத்தே இஸ்லாமியின் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி தலைவர் சகோதரர் ஷப்பீர் அஹமது அவர்களுக்கு அந்நஜாத் ஆசிரியர் அபூ அப்தில்லாஹ் எழுதியது,

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

நலம். நலமே விளைய எல்லாம் வல்ல ஏகன் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன்.

தங்களின் அழைப்பை ஏற்று 28.10.20 07ல் தங்களின் அலுவலகத்தில் இடம் பெற்ற அகில இந்திய ஜமாஅத்தே இஸ்லாமியின் புதிய தலைவர் சகோதரர் ஜலாலுத்தீன் உமரியோடு கலந்துரையாடல் என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். அல்ஹம்துலில்லாஹ். தங்களின் அழைப்பிதழில் முஸ்லிம்கள் இன்று சந்தித்து வரும் இடுக்கண்கள் குறித்து அதாவது இன்றைய நாட்டு நடப்புகள், சமுதாயம் எதிர்கொண்டுள்ள சிக்கல்கள், சவால்கள், அதற்கான தீர்வுகள் போன்ற எல்லாவற்றைக் குறித்தும் ஜமாஅத் தலைவருடன் கலந்துரையாடலாம் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். எனவே இன்று முஸ்லிம் உலகம் அடைந்து வரும் பின்னடைவுகளுக்கும், அதலபாதாள வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணங்கள் குறித்து தலைவருடன் கலந்துரையாடலாம் என்ற ஆவலில் வந்தேன்.

ஆனால் தலைவர் தன்னுடைய உரைக்குப் பின் அவரது உரையில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஊடகத்துறை விஷயத்தில் மட்டுமே தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டும் என்று கூறியதால், சபை ஒழுங்கைக் கருத்தில் கொண்டு என்னுடைய ஆதங்கத்தை வெளியிடாமல் அடக்கிக் கொண்டேன். ஆயினும் நான் எடுத்து வைக்கும் கீழ்க்கண்ட அல்குர்ஆன் வசனங்கள் குறித்து ஜமாஅத்தே இஸ்லாமியின் புதிய தலைவரின் முடிவு என்ன என்று அறிய ஆவலாய் இருக்கிறேன். எனவே தயவு கூர்ந்து எனது இந்தக் கடிதத்தை தலைவருக்குத் தெரிந்த உருது மொழியில் மொழி பெயர்த்து அவருக்கு அனுப்பி அவரது பெருமதி வாய்ந்த பதிலைப் பெற்றுத் தருமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இன்று முஸ்லிம் உலகின் மிகப்பெரும்பான்மையினர் நம்மைப் படைத்த இறைவன், இறுதி வழிகாட்டல் நூல் அல்குர்ஆனின் 25:30–ல் நாளை மறுமையில் நபி(ஸல்) அவர்கள் இறைவனிடம் முறையிடுவதாகக் கூறி இருப்பதுபோல், அல்குர்ஆனை முற்றிலுமாகப் புறக்கணிப்பவர்களாகவே இருக்கிறார்கள். மார்க்க அறிஞர்கள் தங்களின் உபதேசங்களில் “காலல்லாஹுதஆலா” என்று கூறி அருமையாக அல்குர்ஆன் வசனங்களை ஓதி அவற்றின் மொழிபெயர்ப்புகளையும் கூறுகிறார்கள். அதேபோல் “காலரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்” என ஹதீஸ்களையும் அழகாக எடுத்து வைக்கிறார்கள். அவற்றின் மொழி பெயர்ப்புகளையும் எடுத்து வைக்கிறார்கள். மற்றபடி அவற்றில் காணப்படும் கட்டளைகளுக்கு சொந்த – சுய விளக்கம் கொடுக்காமல் அப்படியே எடுத்து நடக்க முற்படுவதில்லை.

அதற்கு மாறாக தங்கள் தங்கள் நோக்கப்படி தங்களின் அமைப்புக்கேற்றவாறு சுய விளக்கங்கள் கொடுத்து மனிதக் கருத்தைப் புகுத்தி மனுதர்மமாக்கி அதையே நடைமுறைப் படுத்துகின்றனர். முஸ்லிம் சமுதாயத்தின் இத்தீய செயலைக் கண்டித்தே நாளை மறுமையில் நபி(ஸல்) அவர்கள் முஸ்லிம் சமுதாயம் அல்குர்ஆனை முற்றிலும் புறக்கணித்து நடந்ததாக குற்றம் சுமத்துகிறார்கள். (பார்க்க 25:30)

உதாரணமாக அன்றைய நிகழ்ச்சியின் ஆரம்பமாக கிராஅத் ஓதுதல் என்ற அடிப்படையில் அல்குர்ஆனின் ஆலஇம்ரான் அத் 3. வசனங்கள் 102 முதல் 105 வரை ஓதப்பட்டு அவற்றின் தமிழ் உரையும் வாசிக்கப் பட்டது. எவ்வளவு ஆழமான கருத்துச் செறிந்த வசனங்கள் – எச்சரிக்கைகள். எந்த அறிஞரின் மேல் விளக்கமும் இல்லாமல் எழுதப் படிக்கத் தெரியாத பாமரனும் பிறர் படிப்பதை காது கொடுத்துக் கேட்ட உடனேயே மிகமிக எளிதாக, தெளிவாக விளங்கிக் கொள்ள முடிந்த அளவிலேயே அவை உள்ளன.

ஆனால் முஸ்லிம்களில் எத்தனைபேர் அறிஞர்கள் முதல் கொண்டு இந்த 3:102–105 இறைவாக்குகளில் உள்ள கட்டளைகளை அப்படியே உள்ளது உள்ளபடி எடுத்து நடக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்? சிறிது நோட்டமிட்டுப் பாருங்கள். நாளை மறுமையில் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் 25:30–ல் உள்ளபடி குற்றம் சாட்டுவது எந்த அளவு உண்மை என்பது புரிய வரும்.

3:103 இறைவாக்கில் அல்லாஹ்வின் கயிறான அல்குர்ஆனைப் பற்றிப் பிடியுங்கள் என்று கூறுவதை ஒற்றுமை என்னும் கயிறைப் பற்றிப் பிடியுங்கள் என்று கூறும் மவ்லவிகள் எத்தனை பேர்? பத்திரிகைகள் எத்தனை? இன்று

முஸ்லிம் சமுதாயத்தில் மிகப் பெரும்பான்மையினர் இருந்து வரும் தர்கா, தரீக்கா, மத்ஹபு அடிப்படையிலான வழிகேட்டுக் கொள்கைகளிலேயே அனைவரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்ற சுய நல அடிப்படையில் தானே இப்படிக் கூறுகிறார்கள். இது ஒரேயொரு எடுத்துக் காட்டுத்தான். இதுபோல் அல்குர்ஆனில் எடுத்து நடக்க வேண்டிய ஒரே பொருளை மட்டுமே தரும் இரண்டாவது பொருளுக்கு இடமே தராத முஹ்க்கமாத் வசனங்களில் தங்கள் தங்கள் தவறான கொள்கைகளுக்கு ஏற்றவாறு விதவிதமான வேறுபட்ட பொருள்களைத் தந்து அந்த வசனங்களைப் புறக்கணிக்கிறார்களா? இல்லையா? கடைபிடிக்க வேண்டிய அல்குர்ஆனின் அடிப்படையான முஹ்க்கமாத் வசனங்கள் பற்றி விளக்கும் 3:7 இறை வாக்கில் மார்க்க அறிஞர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு அதன் அசலான அர்த்தத்தை அனர்த்தமாக்கும் மவ்லவிகள் எத்தனை பேர்? இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். அல்லாஹ் 2:159, 161, 162 இறைவாக்குகளில் கூறி இருப்பது போல், அல்லாஹ் மிகமிகத் தெளிவாக, விளக்கமாக பாமரனும் புரியும் வகையில் நேர்வழியையும், தனது அத்தாட்சிகளையும் விவரித்திருக்கும் நிலையில் அவற்றிற்கு சுய விளக்கம், மேல் விளக்கம் கொடுத்து, அல்குர்ஆனின் நேரடி அசலான, கருத்துக்களை திரித்து, வளைத்து, மறைத்து அல்லாஹ்வினதும், மலக்குகளினதும், மனிதர்களினதும் பெரும் சாபத்திற்கு ஆளாகும் நிலையிலேயே இன்றைய மார்க்க அறிஞர்களில் மிகப் பெரும்பான்மையினர் இருக்கிறார்கள்.

சர்வ சக்தனான அல்லாஹ் தான் படைத்த, தனது அடிமைகளான மனிதர்களுக்கு நேர்வழியையும், தனது ஆதாரங்களையும் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல், கோணல்கள் இல்லாமல் நேரடியாக தெள்ளத் தெளிவாக பாமரர்கள் முதல் அனைத்து மனிதர்களுக்கும் விவரமாக விளக்கி இருப்பதாக, விவரித்திருப்பதாக அல்குர்ஆனில் பல இடங்களில் அப்பட்டமாகக் கூறி இருக்கிறான். அதற்கு மேலும் ஒரு தூதரைத் தேர்ந்தெடுத்து, தனது கண்காணிப்பில் வைத்து அவற்றை நடைமுறையில் மனிதர்களுக்காக செயல் படுத்திக் காட்டவும் செய்துள்ளான்.

இந்த நிலையில் இந்த மார்க்க அறிஞர்கள் என்று தம்பட்டம் அடிக்கும் மவ்லவிகள், அல்குர்ஆனும் ஹதீஸ்களும் பாமரர்களாகிய உங்களுக்கு விளங்காது. அரபிமொழி கற்ற எங்களுக்கே விளங்கும். நாங்கள் கூறும் விளக்கப்படிதான் பாமரர்களாகிய நீங்கள் நடக்க வேண்டும் என்று கூறி முஹ்க்கமாத் வசனங்களுக்கு மேல் விளக்கம், சுயவிளக்கம் கொடுக்கிறார்களே இவர்கள் யாராக இருக்க முடியும்?

இன்னும் அப்பட்டமாக நேரடியாகக் கூறுவதாக இருந்தால், உங்களுக்கு மார்க்கத்தை விளக்கும் ஆற்றல்–தகுதி உங்களைப் படைத்த அல்லாஹ்வுக்கும் இல்லை; அல்லாஹ்வின் கண்காணிப்பில் மார்க்கத்தை செயல்படுத்திக் காட்ட உரிமை பெற்ற (பார்க்க 2:213, 16:44,64) அல்லாஹ்வின் தூதருக்கும் மார்க்கத்தை விளக்கும் ஆற்றல் – தகுதி இல்லை; அந்தத் தகுதி – ஆற்றல் மவ்லவிகளாகிய எங்களுக்கே இருக்கிறது என்பதுதானே அதன் பொருள். அதாவது மார்க்கத்தை விளக்கும் ஆற்றல் அல்லாஹ்வைவிட, அவனது தூதரைவிட எங்களுக்கே அதிகமாக இருக்கிறது என்று சொல்லாமல் சொல்கிறார்கள் அப்படித்தானே? அப்படியானால் இப்படிக் கூறும் மவ்லவிகள் அல்லாஹ்வின் நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? தயவு செய்து அறியத்தாருங்கள். அல்குர்ஆன் 7:3, 33:21,36,66,67,68 மற்றும் 2:170, 5:104, 31:21, 34:43, 43:22,23 இந்த இறைவாக்குகளை படித்து விளங்கிய பின்னரும், அல்லாஹ்வோ அவனது தூதரோ சொல்லாத ஒரு கருத்தை இந்த மார்க்க அறிஞர்கள் சொல்கிறார்கள் என்று எடுத்து நடப்பதும், முன்னோர்கள், மூதாதையர்கள், இமாம்கள் சரியாகத்தான் சொல்லி இருப்பார்கள் என்ற குருட்டு நம்பிக்கையில் எடுத்து நடப்பதும் வழிகேடே என்பதை விளங்காதவர்கள் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா?

அல்குர்ஆன் 7:3, 5:3, 3:19, 85, 33:21, 36, 66, 67, 68 இந்த இறைவாக்குகளை முறையாகப் படித்து உணர்ந்த பின் நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின்னர், அவர்கள் அல்லாஹ்விடமிருந்து வஹீ மூலம் பெற்று மார்க்கமாக அறிமுகப்படுத்தியவற்றில் ஒரு கடுகளவேனும் கூட்டவோ, குறைக்கவோ முடியாது என்பதை விளங்காதவர்கள் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா?

இந்த இறைவாக்குகளை முறையாக நேரடியாக விளங்காததன் காரணமாகத்தானே அல்லது அற்ப உலக ஆதாயத்திற்காகத்தானே, வேண்டுமென்றே ஹிஜ்ரி 400க்குப் பிறகு மனிதர்களால் கற்பனை செய்யப்பட்ட தர்கா சடங்குகள், தரீக்கா சடங்குகள், மத்ஹபுகள், இயக்கங்கள் இவற்றையும் மார்க்கத்தினுள் நுழைத்து தூய இஸ்லாமிய மார்க்கத்தையும் களங்கப்படுத்தியதோடு 21:92, 93, 23:52, 53 இறைக்கட்டளைக்கு முரணாக ஒரே சமுதாயத்தைப் பிளவுபடுத்தி பல பிரிவுகளாக ஆக்கி இருக்கிறார்கள். அவற்றைக் கொண்டு சந்தோசமடைந்து கொண்டிருக்கிறார்கள். (மேலும் பார்க்க 3:103, 105, 6:153, 159, 30:32, 42:13, 14)

இவர்களை எப்படி மார்க்க அறிஞர்களாக ஏற்க முடியும்?

மார்க்கப் பணிகளை தொண்டாக, அல்லாஹ்வுக்காக, மறுமையில் கூலியை எதிர்பார்த்து செய்ய வேண்டும்; உலகில் மக்களிடம் கூலி வாங்கக் கூடாது; அது நேர்வழி இல்லை என்றும், மீறி உலகில் மக்களிடம் கூலி வாங்குகிறவர்கள் மார்க்கத்தில் எப்படிப்பட்ட கோணல் வழிகளை உண்டாக்குகிறார்கள் என்றும் அல்குர்ஆனில் சுமார்

ஐம்பது(50)க்கும் மேலான இடங்களில் மிகக் கடுமையாக அல்லாஹ் எச்சரித்திருந்தும், அல்லாஹ்வின் இந்தக் கடுமையான எச்சரிக்கைகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு தொண்டை தொழிலாக்கி, அதன்மூலம் வருவாய் ஈட்டி வாழ்பவர்கள் உண்மையில் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா? மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொள்வதால்தான் அதில் மனிதக் கற்பனைகளைப் புகுத்தி மார்க்கத்தை மதமாக்கி மனுதர்மமாக்கும் கட்டாயம் இந்த மவ்லவிகளுக்கு ஏற்படுகிறது என்பதை மறுக்க முடியுமா?

அல்லாஹ்வின் கண்காணிப்பில் இருந்த (52:48) இறைவனின் தூதரே இறைவன் அறிவித்ததைப் புறக்கணித்து தமது சொந்த விருப்பத்தை மார்க்கமாக்கினால் எவ்வளவு கடுமையான தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்பதை 5:67, 6:52, 53, 17:73-75, 66:1,2, 69:44-47, 80:1-12 இத்தனை இடங்களில் இத்தனை இறைவாக்குகளில் மிகக் கடுமையாக எச்சரித்திருக்கும் நிலையில், தர்கா சடங்குகளின் பெயரால், தரீக்கா சடங்குகளின் பெயரால், மத்ஹபுகளின் பெயரால், இயக்கங்களின் பெயரால், அமைப்புகளின் பெயரால் மனிதக் கற்பனைகளை- மனு தர்மத்தை மார்க்கத்தில் நுழைத்து மார்க்கத்தை மதமாக்கி மக்களை வழிகெடுப்பவர்கள் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா?

5:67-ல் அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறக்கப்பட்டதை மக்களின் விருப்பு வெறுப்பைக் கணக்கில் கொண்டு மக்களுக்கு முழுமையாக எடுத்துக் கூறத் தவறினால், இறைவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர், என்று இறைத்தூதரையே அல்லாஹ் கடுமையாக எச்சரித்திருக்கும் நிலையில், மார்க்கக் காரியங்களில் இது பெரிது, இது சிறிது, இது அவசியம், இது அவசியமில்லாதது என இவர்களாகக் கற்பனை செய்து கொண்டு, அல்லாஹ் இறக்கியவற்றில் சிலதை சொல்லியும், சிலதை மறைத்தும் (பார்க்க 2:85) செயல்படுகிறவர்கள் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா? அல்லாஹ் 17:73-ல் கூறி இருப்பதுபோல், மக்கள் தங்களை அவர்களின் உற்ற நண்பர்களாக எடுத்துக் கொண்டு, தங்களை ஆதரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் இந்த அறிஞர்கள் என்பதில் சந்தேகமுண்டா? உலகில் பேர் புகழையும், செல்வாக்கையும், பணம் காசையும், செல்வச் செழிப்பையும் எதிர்பார்த்தே இப்படி நடக்கிறார்கள் என்பதில் சந்தேகமுண்டா? மார்க்கத்தைக் கொண்டு உலகைத் தேட அல்லாஹ் தடை விதித்திருப்பதின் உண்மை நிலை புரிகிறதா?

“நானே மிகப்பெரிய இறைவன்” என்று அகந்தை பேசிய ஃபிர்அவனிடம் மூஸா(அலை), ஹாரூன்(அலை) ஆகிய இரு நபிமார்களை அல்லாஹ் அனுப்பியபோது “நீங்கள் இருவரும் அவனிடம் நளினமாக மென்மையான சொல்லால் சொல்லுங்கள்” (20:44) என்று அல்லாஹ் சொல்லி அனுப்பியதை ஆதாரமாகக் காட்டி, உள்ளதை உள்ளபடி சொன்னால் மக்கள் வருத்தமடைகிறார்கள். அதனால் சிலவற்றை சொல்லாமல் மறைக்கிறோம்; மக்களின் மனநிலைக்கு ஏற்ப செயல்படுகிறோம் என்கிறார்கள். ஆனால் 20:44ஐத் தொடர்ந்துவரும் 45, 46, 47, 48 இறைவாக்குகளைக் கவனமாகப் படித்துப் பார்த்தால் அவர்கள் எப்படிப்பட்ட தவறில் மூழ்கி இருக்கிறார்கள் என்பது புரியும்.

**அதிலும் குறிப்பாக 20:48-ல் எவன் (அல்லாஹ் அருளியதை) பொய்ப்பித்து, புறக்கணிக்கிறானோ அவன்மீது நிச்சயமாக வேதனை ஏற்படும் என எங்களுக்கு உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று ஃபிர்அவ்னுக்குக் கூறுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.**

இந்த 20:48 இறைவாக்கிலிருந்து என்ன தெரிகிறது? அல்லாஹ் கூறியிருப்பது எவ்வளவு கடினமான, மக்கள் வெறுக்கின்ற ஒன்றாக இருந்தாலும், அதை அல்லாஹ் கூறுகிறான் என்று மக்கள் மன்றத்தில் எடுத்து வைப்பது 20:44-ல் கூறியுள்ள நளினமான சொல்லுக்கு முரண் இல்லை என்பது புரிகிறதா? இல்லையா? குர்ஆனில் உள்ளதையோ, நபி(ஸல்) அவர்களின் நடைமுறையில் உள்ளதையோ, மக்கள் இப்போதைக்கு ஏற்க மாட்டார்கள், நிராகரித்து விடுவார்கள், நம்மை ஒதுக்கிவிடுவார்கள், மக்களிடையேயுள்ள செல்வாக்கு சரிந்துவிடும், மேலும் அவதூறு பரப்புவார்கள், துன்புறுத்துவார்கள் என பயந்து அவற்றைச் சொல்லாமல் மறைத்தால் 5:67-ல் அல்லாஹ் எச்சரித்துள்ளபடி நமது கடமையை நாம் செய்தவர்கள் ஆக மாட்டோம். சத்தியத்தை உள்ளது உள்ளபடி எடுத்து வைப்பதின் காரணமாக மக்களிடமிருந்து எவ்வளவு பெரிய இடுக்கண்கள் வந்தாலும், அவற்றிலிருந்து அல்லாஹ் நம்மைக் காப்பதாக இதே 5:67-ல் உறுதி அளித்துள்ளான். இதை உணர்ந்து செயல்படாதவர்கள் மார்க்க அறிஞர்களா?

சத்தியத்தை, நேர்வழியை மக்கள் மன்றத்தில் வைப்பதிலிருந்தும் ஒதுங்கிக் கொள்ள இன்னொரு தந்திரத்தைச் சொல்கிறார்கள். 2:191-ல் ஃபித்னா-குழப்பமும், கலகமும் செய்தல் கொலை செய்வதைவிடக் கொடியதாகும் என்று அல்லாஹ் கூறுகிறான். மக்களிடம் மண்டிக் கிடக்கும் நேர்வழிக்கு முரண்பட்ட கோணல் வழிகளைச் சுட்டிக் காட்டும்போது ஃபித்னா-குழப்பம், கலகம் ஏற்படுகிறது. அது கொலையைவிடக் கொடியது. எனவே இந்தக் கட்டங்களில் நேர்வழியை மக்களிடம் எடுத்துச் சொல்லாமல் மறைப்பதே சிறந்தது எனக் கூறுவதோடு, மக்களைக் கவர இவர்களும் சில நபி வழிக்கு முரண்பட்ட செயல்களை செய்து வருவதோடு 5:67 மற்றும் 20:48க்கு முரணாக தங்களின் இந்த தவறான செயல்களை நியாயப்படுத்துகிறார்கள்.

ஆனால் உண்மையில் இந்த 2:191 இறைவாக்கு என்ன சொல்கிறது தெரியுமா? அது அசத்தியத்தை முறியடித்து சத்தியத்தையும், கோணல் வழிகளை ஒழித்து நேர்வழியை நிலைநாட்ட பாடுபட்ட ஒரே காரணத்திற்காக அப்படிப்பாடுபட்ட உண்மையாளர்களை எதிர்த்துப் போரிட்டும், அவர்களது இல்லங்களிலிருந்து வெளியேற்றியும் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு எதிராகப் போராடியவர்கள் செய்த செயல்கள்தான் ஃபித்னா-குழப்பம், கலகம் விளைப்பதாகும். மற்றபடி மக்களிடையே மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கைகள், அனாச்சாரங்கள், நபி வழிக்கு முரண்பட்ட செயல்கள், பித்அத்கள், ஷிர்க்குகள் இவற்றை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கொண்டு அந்த மக்களிடையே சொல்லும்போது நிச்சயம் மக்கள் அதை எதிர்ப்பார்கள். ஃபித்னா-குழப்பம்-கலகம் செய்வார்கள். இதற்குப் பயந்து சத்தியதை-நேர்வழியை சொல்லாமல் பின் வாங்குவது 5:67, 17:73 இறைக்கட்டளைகள்படி பெருங்குற்றமாகும். நபி(ஸல்) இந்த அடிப்படையில் சத்தியத்தை-நேர்வழியை அந்த மக்களுக்கு மத்தியில் எடுத்து வைத்த ஒரே காரணத்தால் தான் இப்படிப்பட்ட இன்னல்கள் அனைத்தையும் அனுபவித்தார்கள்.

அன்று நபி(ஸல்) அவர்கள், அரபு மக்களிடையே அல்லாஹ்வின் கட்டளைப்படி சத்தியத்தை-நேர்வழியை மறைக்காமல் எடுத்து வைத்தபோது, ஏற்பட்ட ஃபித்னா-குழப்பம், கலகம் போல் அதற்கு முன்னரும் ஏற்பட்டதில்லை; பின்னரும் ஏற்பட்டதில்லை. இறுதி இறைத்தூதரும், அவர்களது குடும்பத்தாரும் அனுபவித்த துன்பங்களை அதற்கு முன்னரும், பின்னரும் யாரும் அனுபவித்ததில்லை.

சத்தியத்திற்கு-நேர்வழிக்கு எதிராகப் போராடுவதுதான் ஃபித்னா-குழப்பம், கலகம் ஆகும். இந்த மறுக்கமுடியாத உண்மையை ஃபித்னா-குழப்பம், கலகம் நீங்கி அல்லாஹ்வுக்கே மார்க்கம் என்பது உறுதியாகும் வரை நீங்கள் அவர்களுடன் போராடுங்கள் என்ற 2:193 இறைவாக்கு வெளிரங்கமாக எடுத்துச் சொல்கிறது.

இவ்வளவு தெளிவான-நேரடியான இறைக் கட்டளைகளுக்கு முரணாக குர்ஆன், ஹதீஸில் உள்ளதை உள்ளபடி முஸ்லிம்களுக்குச் சொன்னால், அதனால் ஃபித்னா- குழப்பம், கலகம் ஏற்படுகிறது என்று கூறி கோணல் வழிகளையே எடுத்து நடப்பவர்கள் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா? இவர்களை இறைநேசர்களின் பட்டியலில் சேர்ப்பதா? ஷைத்தானின் தோழர்கள் பட்டியலில் சேர்ப்பதா? சொல்லுங்கள்.

அல்குர்ஆன் 45:18, 17:39, 43:43, 30:30, 33:1,2, 6:57,68, 25:52, 28:86-88, 5:100 இன்னும் இவைபோல் எண்ணற்ற இடங்களில் அல்லாஹ்வின் கண்காணிப்பில் இருந்த நபி(ஸல்) அவர்களே அல்லாஹ் வஹீ மூலம் அறிவித்த வழியல்லாது வேறு வழி தேடக்கூடாது; அதுவே நேர்வழி. வழிகேட்டிலிருப்பவர்களின் உலக வசதிகளும், அவர்களின் பின்னால் இருக்கும் பெருங்கூட்டமும் உம்மை மயக்கிவிடக் கூடாது. எந்த நிலையிலும் மக்களைத் திருப்திப்படுத்த அல்லாஹ் அறிவித்தவற்றில் உமது சுய கருத்தைப் புகுத்த முற்படக் கூடாது என்று பலவாறாக தெள்ளத் தெளிவாக நேரடியாக அல்லாஹ் எச்சரித்திருக்கும்போது, அல்லாஹ்வின் தூதருக்கே இந்த நிலை என்றால், அதற்கு முரணாக அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளுக்கு முரணாக ஹிஜ்ரி 400க்குப்பிறகு மனிதர்களால் கற்பனை செய்யப்பட்ட மனு தர்மமான தர்கா, தரீக்கா, மத்ஹபுகள், இயக்கங்கள், அமைப்புகள் என முஸ்லிம்களை பிளவுபடுத்துகிறவர்கள் மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா? இவர்கள் இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

இந்த மார்க்க அறிஞர்கள் சர்வசாதாரணமாக "நீங்கள் அறியாதவர்களாக இருந்தால், அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்" என்றும், இன்னும் ஒருபடி மேலே போய் "நீங்கள் அறியாதவர்களாக இருப்பதால், அறிந்தவர்களை, தர்கா, தரீக்கா, மத்ஹபு, இயக்கம், அமைப்பு போன்ற அடிப்படையில் "தக்லீது" செய்யுங்கள் என்றே போதித்து வருகிறார்கள். ஆனால் அல்குர்ஆனில் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். அல்குர்ஆன் 16:43, 21:7 ஆகிய இரு இடங்களில் இந்த இறைவாக்கு காணப்படுகிறது. அது வருமாறு:

"**ஃபஸ்அலூ அஹ்லஃதிக்ரி இன்குன்த்தும் லா தஃலமூன்**" நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் இறை அறிவிப்புகளை உடையவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள். இதுதான் சரியான மொழி பெயர்ப்பு. மார்க்க அறிஞர்கள் சொல்வது போல் அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்வதாக இருந்தால் "ஃபஸ்அலூ அஹ்லல் இல்மி" என்று இருக்க வேண்டும். தர்கா, தரீக்கா, மத்ஹபு, இயக்கம், அமைப்பு இவற்றின் பெயரால் தக்லீது செய்வதாக இருந்தால் "கல்லிதூ அஹ்லல் இல்மி" என்று இருக்க வேண்டும். இங்கு "ஃபஸ்அலூ அஹ்லஃதிக்ர்" என்றே இருக்கிறது. "அஹ்லஃ திக்ர்" - இறை அறிவிப்புகளை உடையவர்களிடம் கேளுங்கள்" என்றே இருக்கிறது.

மேலும் இந்த 16:43, 21:7 இரு இறைவாக்குகளை முழுமையாகப் படிப்பவர்கள் "நபி(ஸல்) அவர்களுக்கு முன்னர் நபிமார்களாக அனுப்பி வைக்கப்பட்டவர்கள் ஆண்களே" என்று கூறி இருப்பதை அறிய முடியும். முன்னர் நபிமார்களாக அனுப்பப்பட்டவர்கள் ஆண்களா? பெண்களா? என்பது இந்த மார்க்க அறிஞர்களின் அறிவில், ஆய்வில் வரக் கூடியதா? என்று சிந்தித்துப் பாருங்கள். நிச்சயமாக வர முடியாது. இந்த உண்மையை அல்லாஹ்தான் வஹீ மூலம் அறிவித்திருக்க வேண்டும். அதல்லாது வேறு வழியே இல்லை. இதிலிருந்து என்ன புரிகிறது? மார்க்க

விஷயமாக இந்த அறிஞர்களிடம் யாரும் வந்து கேட்டால், அவர் உண்மையாளராகவும், அல்லாஹ்வின் தக்வாவை(பயபக்தி) மனதில் கொண்டவராகவும் இருந்தால் என்ன செய்ய வேண்டும்? உடனே அல்குர்ஆனை எடுத்து அவரிடம் கேட்பது பற்றிய குர்ஆன் ஆயத்தை எடுத்துக் காட்ட வேண்டும். ஆதாரபூர்வமான ஹதீஸை எடுத்துக் காட்ட வேண்டும். அதற்கு மாறாக குர்ஆனையும், ஹதீஸையும் புறக்கணித்துவிட்டு தனது மனதில் தோன்றியதை மனிதக் கற்பனையை – மனுதர்மத்தை – மனிதக் கற்பனையில் உருவான பிக்ஹு சட்டத்தை மதத் தீர்ப்பாக எடுத்துச் சொல்கிறவர்கள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள். தங்களின் தவறான மதத்தீர்ப்பை நியாயப் படுத்தத்தான் “ஃபஸ்அலூ அஹ்லஃத்திக்ர்” என்பதை அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள் என்று காலங்காலமாகச் சொல்லி வருகிறார்கள் – எழுதி வருகிறார்கள்; மக்களை ஏமாற்றி சுரண்டி வருகிறார்கள்.

இந்த மவ்லவிகள் பீற்றிக் கொள்ளும் அளவில் இவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் அதிகாரம் பெற்றவர்களா? என்று அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் முழுக்கத் தேடினாலும் ஒரேயொரு ஆதாரத்தையும் பார்க்க முடியாது. அல்குர்ஆனில் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் அடிபணிய வேண்டும்; அல்லாஹ் அவனது ரஸூலின் கட்டளைப்படி நடக்க வேண்டும் என்று (19) பத்தொன்பது இடங்களிலும், அல்லாஹ்வுக்கு அஞ்சி எனக்கு வழிப்பட்டு, எனது கட்டளைப்படி நடங்கள் என்று நபி(ஸல்) கூறியதாகப் பதினொன்று(11) இடங்களில் வருகிறது.

அல்குர்ஆன் 4:59-ல் அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள், அவனது தூதருக்கும், உங்களில் (மனிதர்களில்) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் வழிப்படுங்கள். அந்த அதிகாரம் வகிக்கும் அமீர் குர்ஆன், ஹதீஸுக்கு உட்பட்டே கட்டளையிட வேண்டும். குர்ஆன், ஹதீஸுக்கு முரண்பட்ட ஒன்றை மார்க்கமாக்கும் அதிகாரம் உங்களுடைய அமீருக்கும் இல்லை என்பதை தெளிவாக விளக்குகிறது.

இங்கு அமீர் என்பவர் ஆட்சி அதிகாரம் உள்ளவராக இருக்க வேண்டும் என்று சிலர் கூறி வருவது ஓர் அபத்தமான கூற்றாகும். ஒன்றுபட்டிருந்த ஜமாஅத்தை பிளவுபடுத்திய மாபெரும் குற்றத்தை நியாயப்படுத்த எடுத்து வைத்த சொத்தை வாதமாகும். ஆட்சி அதிகாரம் உள்ளவர்தான் அமீர் என்றால் அதை யார் சொல்ல வேண்டும்? அல்லாஹ் இந்த 4:59 இறைவாக்கிலேயே அதை நேரடியாகச் சொல்லி இருக்க வேண்டும். குறைந்த பட்சம் குர்ஆனுக்கு விளக்கம் கொடுக்க உரிமை பெற்ற நபி(ஸல்) கூறி இருக்க வேண்டும். 1400 ஆண்டுகளுக்குப்பிறகு இந்த மவ்லவிகள் மேல் விளக்கம் கொடுக்கும் நிலையில் மார்க்கம் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

“மூன்று நபர்கள் பிரயாணம் புறப்பட்டாலும் அந்த மூவரில் ஒருவரை அமீராக ஆக்கி கொள்ளுங்கள்” என்பது நபி(ஸல்) அவர்களின் கட்டளை. காரணம் குர்ஆன், ஹதீஸுக்கு முரண் இல்லாதவற்றில், உதாரணமாக பிரயாணத்தை பேருந்தில் தொடர்வதா? தொடர் வண்டியில் தொடர்வதா? போன்றவற்றில் கருத்து மோதல் வரும்போது அதைத் தீர்த்து ஒற்றுமை காக்க ஒரு அமீர் தேவைப்படுகிறார். இங்கு பிரயாணத்தை கருத்தொற்றுமையுடன் தொடர்ந்து, நிம்மதியாக ஊர் வந்து சேர தேவைப்படும் அதிகாரம் பிரயாண அமீருக்குக் கொடுக்கப்படுகிறது. இதுபோல் ஒவ்வொரு விஷயத்தையும் விளங்கிக் கொள்ளளாம். இங்கு ஆட்சி அதிகாரம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த நிலையில் ஆட்சி அதிகாரம் உள்ளவர் மட்டும் தான் அமீராக முடியும் என்று வாதிடுகிறவர்கள் மார்க்க அறிஞர்களா? அல்லாஹ்வின் நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் வழிப்பட்டு அடிபணிய வேண்டும். குர்ஆன், ஹதீஸ் கட்டளைப்படி நடக்க வேண்டும், மனிதர்களில் அமீருக்கு குர்ஆன், ஹதீஸுக்கு முரண் இல்லாத நிலையில் கட்டுப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதே அல்லாமல் மார்க்க அறிஞர்களுக்குக் கட்டுப்பட வேண்டும். அவர்களின் சுய கருத்துக்களை எடுத்து நடக்க வேண்டும் என்று கூறும் ஒரு ஆயத்தும் இல்லை; ஒரு ஹதீஸும் இல்லை.

அல்குர்ஆன் 58:11, 35:28, 39:9, 35:19 போன்ற இறைவாக்குகளையும் முன்னர் விளக்கிய 16:43, 21:7 இறைவாக்குகளையும் ஓதிக்காட்டி ஆலிம்களுக்கு அதிகாரம் இருப்பதாக வாதிடுவார்கள். ஆனால் இந்த இறைவாக்குகள் அனைத்தும் முஸ்லிம் ஆண், பெண் அனைவரும் கற்று உயர்நிலை அடைய வேண்டும் என்று சொல்லுகின்றனவே அல்லாமல், சமுதாயத்தை ஆலிம்-அவாம் என பிரித்து, இந்த ஆலிம்கள் முஸ்லிம்கள்மீது குதிரை சவாரி செய்ய, அதிகாரம் பண்ண எவ்வித ஆதாரமும் இல்லை. 35:28-ல் அல்லாஹ்வுக்கு முறையாக அஞ்சி நடப்பவர்களே ஆலிம்கள் என்றிருப்பதை, தங்களின் ஏமாற்று வேலையை நிலைநாட்ட ஆலிம்களாகிய நாங்கள்தான் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கிறோம் என்று மிகத் தவறாகத் திரித்துச் சொல்வார்கள். இவர்களின் இந்த வாதப்படி எந்த மொழியையும் படிக்கவோ, எழுதவோ தெரியாத நபி தோழர்கள் ஆலிம்களே இல்லை; அவர்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கவும் இல்லை என்று தவறாகப் பொருள்படுகிறதே என்பது பற்றி எல்லாம் கவலைப்பட மாட்டார்கள். இந்த உலகிலேயே நபிமார்களுக்கு அடுத்து மாபெரும் மார்க்க அறிஞர்களாகவும், அல்லாஹ்வுக்கு மிகவும் அஞ்சி நடப்பவர்களாகவும் இருந்தார்கள் நபி தோழர்கள் என்பதை மறந்து விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

அல்குர்ஆன் 2:159, 4:28, 16:89, 19:97, 22:78. 25:33, 44:58, 54:17, 22, 32, 40, 80:20 போன்ற பல இடங்களில் மனிதனின் பலகீனம் காரணமாக மார்க்கத்தை – நேர்வழியை அரபு மொழி தெரிந்தவர்கள், மவ்லவிகள் மட்டுமல்ல, மனித இனத்திலுள்ள ஆண், பெண் அனைவரும் விளங்கும் வகையில் மிக மிக எளிமைப் படுத்தித் தந்திருப்பதாக அல்லாஹ் கூறுகிறான். அதல்லாமல் அல்குர்ஆனை பொருள் அறிந்து படிப்பவர்கள் அதில் பெரும்பாலும் பக்கத்திற்குப் பக்கம் தெளிவாக்கி இருக்கிறோம், விவரித்திருக்கிறோம், புரிய வைக்கிறோம். எளிமைப்படுத்தியிருக்கிறோம் என்று அல்லாஹ்வே கூறுகிறான். அதல்லாமல் மவ்லவிகளை மட்டுமல்ல, ஆண், பெண் அனைவரையும் அழைத்து சிந்திக்க மாட்டீர்களா? உங்கள் இதயத்தில் பூட்டா போடப்பட்டிருக்கிறது? என்று திருப்பி திருப்பி அல்லாஹ் கேட்கிறான்.

5:6, 6:125, 7:2, 9:91, 24:61, 33:37,38,50, 48:17 போன்ற பல இடங்களில் சின்ன சின்ன விஷயங்களையும் தெளிவுபடுத்தியுள்ளான் அல்லாஹ். இந்த நிலையில், அதாவது மனிதனைப் படைத்த அல்லாஹ்வே அந்த மனிதனுக்குரிய வாழ்க்கை நெறியை – நேர்வழியை இரவும் பகலைப் போல் தெள்ளத் தெளிவாக விளக்கி இருக்கும் நிலையில், குர்ஆன் உங்களுக்கு விளங்காது, ஹதீஸ் உங்களுக்கு விளங்காது, நாங்கள் விளக்குவதைத்தான் நீங்கள் எடுத்து நடக்க வேண்டும் என்று இந்த மவ்லவிகள் சொன்னால், இவர்கள் மார்க்கம் தெரிந்த மார்க்க அறிஞர்களாக இருக்க முடியுமா? இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள். அல்லாஹ் உங்களுக்கு விளக்கியது போதாது; அதற்குரிய ஆற்றல் அல்லாஹ்வுக்கோ, அவனுடைய தூதருக்கோ இல்லை; அந்த ஆற்றல் எங்களுக்கே இருக்கிறது என்று சொல்லாமல் சொல்லும் இந்த மவ்லவிகள் மார்க்க அறிஞர்களா? அல்லது "அன ரப்புகுமுல் அஃலா" என்று அகந்தையுடன் கூறிய ஃபிர்அவ்னுடைய வாரிசுகளா? நீங்களே சொல்லுங்கள்!

அல்லாஹ்வே தன்னுடைய அடிமைகளான மனிதர்கள் அனைவருக்கும் மார்க்கத்தை – நேர்வழியை தெளிவுபடுத்திய பின்னர் அல்லாஹ்வுக்கும் அடியார்களுக்குமிடையில் இடைத் தரகர்களாக வருவதற்கு இவர்கள் யார்? 7:3, 33:21, 36, 66, 67, 68 இந்த இறை வாக்குகளை முறையாகப் படித்து விளங்கியவர்களுக்கு இந்த அசட்டுத் துணிச்சல் ஏற்பட முடியுமா? இப்படிப்பட்ட அகந்தை, ஆணவம் அனைத்தும் நிரம்பிய இவர்கள் நபிமார்களின் வாரிசுகளா? அபூஜஹ்லீல் வகையறாக்களின் வாரிசுகளா? நீங்களே சொல்லுங்கள்.

இறைவனால் படைக்கப்பட்ட மனித வர்க்கத்திலுள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும் அல்குர்ஆனையும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களையும், அரபி மொழியிலோ அல்லது தங்களுக்குத் தெரிந்த மொழிகளிலோ படித்து, அல்லது படிப்பதைக் கேட்டு, சத்திய மார்க்கத்தை–நேர்வழியை சுயமாகச் சிந்தித்து விளங்கிக் கொள்ள முடியும் என்று தயக்கமில்லாமல் கூறும் ஒரேயொரு மவ்லவியாவது இருக்கிறாரா? அப்படி ஒருவரைக் காட்ட முடியுமா? அப்படியொருவர் இருந்தால், நிச்சயமாக அவர் மார்க்கத்தை வைத்து பிழைப்பு நடத்தாமல் ஹலாலான முறையில் உழைத்துச் சாப்பிடக் கூடியவராக மட்டுமே இருக்க முடியும். தொண்டைத் தொழிலாகவும், மார்க்கத்தை மதமாகவும் ஆக்கி அது கொண்டு பிழைப்பு நடத்துகிறவர்களில் ஒருவர் கூட இந்த உண்மையை ஏற்கும் நிலையில் இருக்க முடியாது. காரணம் அது அவரின் பிழைப்பிலேயே மண்ணை அள்ளிப் போட்டு விடும். ஆம்! என்று இந்த மவ்லவிகள் மார்க்கத்தைத் தங்களின் பிழைப்புக்குரிய வழியாகக் கொள்ளாமல், சொந்தமாக, சுயமாக, ஹலாலான முறையில் உழைத்துச் சாப்பிட்டுக் கொண்டு, மார்க்கப் பணியை அல்லாஹ்வின் பொருத்தம் நாடி, மறுமையில் கூலியை எதிர்பார்த்து செய்ய முன் வருகிறார்களோ அப்போதுதான் குர்ஆனில், ஹதீஸில் உள்ளதை உள்ளபடி சொல்லும் மன உறுதியையும், நேர்மையையும் பெறுவார்கள். இந்த எமது கருத்தை மறுக்கிறீர்களா?

இந்த மவ்லவிகள் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டிருப்பதால், அல்குர்ஆன் வசனங்களை அழகாக ஓதிவிட்டு அதை மொழி பெயர்ப்பும் செய்துவிட்டு, பின்னர் என்ன செய்கிறார்கள் தெரியுமா? புரோகிதர்களை உருவாக்கும் மதரஸாக்களில் முழு கவனம் எடுத்து படிப்பித்துக் கொடுக்கும் மன்திக், ஃபல்ஸஃபா மூலம் அறிந்த அறிவை மூலதானமாகக் கொண்டு, மக்களை மயக்கும் தத்துவப் பேச்சுக்களைக் கொண்டும் கற்பனை கட்டுக் கதைகளைக் கொண்டும் அவர்களை மயக்கி, கோணல் வழிகளையே நேர்வழி போல் காட்டி அவர்களை நம்பச் செய்து உள்ளுக்குள் மகிழ்ச்சி அடைகிறார்கள். இதையும் அல்லாஹ் 40:83 சுட்டிக் காட்டுகிறான் பாருங்கள்.

**ஆகவே, அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான ஆதாரங்களுடன் வந்தபோது, அவர்கள் தங்களிடமிருந்த கல்வியைக் கொண்டு பெரும் மகிழ்ச்சி அடைந்திருந்தார்கள்; எனினும் அவர்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்ததுவே அவர்களைச் சூழ்ந்து கொண்டது** (அல்குர்ஆன் – அல்முஃமின்:40:83) முன்னைய நபிமார்களின் சமூகங்களை வழிகெடுத்த புரோகிதர்களுக்கும், முஸ்லிம் சமுதாயத்திலுள்ள மவ்லவி புரோகிதர்களுக்கும் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களை இவர்கள் ஜானுக்கு ஜான், முழத்திற்கு முழம் அப்படியே பின்பற்றுகிறவர்களாகவே இருக்கிறார்கள். (பார்க்க புகாரீ 3456). அல்குர்ஆன் 28:87 என்ன கூறுகிறது என்று பாருங்கள்.

“**இன்னும், அல்லாஹ்வின் வசனங்கள் உமக்கு அருளப்பட்டபின், எதுவும் உம்மை அவற்றை விட்டும் நிச்சயமாகத் திருப்பிவிடாதிருக்கட்டும்..........**” (28:87)

இறைவனுடைய தூதருக்கே இவ்வளவு கடுமையாக எச்சரிக்கை என்றால், எண்ணற்ற குர்ஆன் வசனங்களின் நேரடி கருத்துக்கு முரணாக மக்களைத் திசைதிருப்பும் இந்த மவ்லவிகளின் உண்மை நிலை என்ன? இவர்கள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

அல்லாஹ் 49:16-ல் சொல்லுவதுபோல் அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்க முற்படுகிறார்களா? இல்லையா? அல்லாஹ் விதிக்காததை அதாவது தர்கா, தரீக்கா, மத்ஹபு, இயக்கம், அமைப்புகள் இவற்றை விதிக்கும் இவர்கள் 42:21-ன்படி அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் கொடியவர்களா? இல்லையா? இவர்கள் பின்னால் செல்பவர்களை இறைவனுக்கு இணை வைக்கும் கொடிய குற்றத்தைச் செய்ய வைக்கிறார்களா? இல்லையா? இவர்கள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

5:44, 45, 47 படி இறைவனால் இறக்கியருளப்பட்டவற்றைப் புறக்கணித்து மேற்கண்ட விஷயங்களில் தீர்ப்பு அளிப்பவர்கள் கஃபிர்கள், அநியாயக்காரர்கள், பாவிகள் என்பதில் சந்தேகமுண்டா? சொல்லுங்கள்.

அன்று அரபி மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அரபிகள் அல்குர்ஆனை ஓதுவதைக் கேட்ட மாத்திரத்தில் அதிலுள்ள உண்மையை உணர்ந்து நேர்வழிக்கு வந்து விடுவார்கள் என்று அஞ்சி, அன்றைய அரபு நாட்டு புரோகிதர்கள், அல்குர்ஆனை ஓதக் கேட்பதையே தடுத்து வந்தார்கள். இதோ அதுபற்றி அல்லாஹ் கூறுகிறான் கேளுங்கள்.

“**நீங்கள் இந்த குர்ஆனை செவி ஏற்காதீர்கள். அதில் கூச்சலிடுங்கள்; நீங்கள் அதனால் மிகைத்துவிடுவீர்கள்” என்று நிராகரிப்பவர்கள் கூறினர்.** (41:26)

அதற்கு மாறாக இன்றைய நம் நாட்டு புரோகிதர்கள் என்ன சொல்கிறார்கள்? பொருள் அறியாது எவ்வளவு வேண்டுமானாலும் குர்ஆனை ஓதுங்கள். அது கைநிறைய நன்மைகளை அள்ளித்தரும். ஆனால் அவற்றின் பொருள்களை அறிய முற்படாதீர்கள். அது உங்களுக்கு விளங்காது என்று கூறி மக்களை குர்ஆன் கூறும் உண்மைக் கருத்துக்களை அறியவிடாமல் தடுக்கின்றனர்.

நபி காலத்துப் புரோகிதர்களுக்கும் நம் காலத்து புரோகித மவ்லவிகளுக்கும் வேறுபாடு இருக்கிறதா? சொல்லுங்கள்.

அல்குர்ஆன் 18:22-ல் குர்ஆனில் நேரடியாக, வெளிரங்கமாக சொல்லியிருக்கும் விஷயம் தவிர, யூக அடிப்படையில் தர்க்கம் செய்ய வேண்டாம் என்று இறைத் தூதருக்கே அல்லாஹ் கட்டளையிட்டுள்ள நிலையில், இந்த புரோகித மவ்லவிகள், குர்ஆனில் இல்லாத, ஆதாரபூர்வமான ஹதீஸில் இல்லாத எத்தனை விஷயங்களை மார்க்த்தினுள் நுழைத்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பாருங்கள். இப்படிப்பட்டவர்கள் மார்க்க அறிஞர்களா? சொல்லுங்கள்.

அல்லாஹ் அல்குர்ஆனில் ஷைத்தானின் சாகஸங்கள், சூழ்ச்சிகள், ஆதத்தின் சந்ததிகளை வழிகெடுத்து நரகில் கொண்டு தள்ள சபதம் ஏற்றுள்ளது இவை அனைத்தையும் 2:34-38, 7:11-27, 15:26-44, 38:71-85 இன்னும் இவைபோல் பல இடங்களில் தெள்ளத் தெளிவாக அப்பட்டமாக கூறியிருந்தும், அல்லாஹ்வின் இத்தனை கடுமையான எச்சரிக்கைகளைப் புறக்கணித்துவிட்டு, ஷைத்தான் தனது சுய விளக்கங்கொண்டு அல்லாஹ்வின் நேரடிக் கட்டளையைப் புறக்கணித்தது போல், இந்த மவ்லவிகளும் தங்களின் சுய விளக்கங்களைக் கொண்டு அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளைப் புறக்கணித்து அவர்களும் வழிகெட்டு, மக்களையும் வழிகெடுக்கிறார்களா? இல்லையா? இவர்கள் இறை நேசர்களா? ஷைத்தானின் நேரடி ஏஜண்டுகளாகச் செயல்படுகிறார்கள் என்று நாம் கூறி வருவது சரியா? தவறா?

ஆதத்திற்கு சுஜூது செய்ய மறுத்து ஷைத்தான் கூறிய சுயவிளக்கம், அதாவது தன்னை நெருப்பிலிருந்து படைத்ததாகவும், ஆதத்தை மண்ணிலிருந்து படைத்ததாகவும், மண்ணைவிட நெருப்பு உயர்ந்தது என்ற ஷைத்தானின் வாதம் அறிவு ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு வாதம்தான். ஆனால் அவனைப் படைத்தவன் வேறொருவனாக இருக்க இன்னொருவன் இப்படிக் கட்டளையிட்டிருந்தால் இந்த வாதம் பொருந்தும். படைத்த அல்லாஹ்வே இப்படிக் கட்டளையிடும்போது இந்த வாதம் ஆணவத்தின் அடிப்படையிலானதாகும். அதனால்தான் அல்லாஹ், ஷைத்தான் ஆணவம் கொண்டான் என்று 2:34, 7:13, 38:74 என பல இடங்களில் கூறுகிறான். ஆனால் இவ்வளவு நடந்த பின்னரும் ஆதம்(அலை) அவர்களுக்கு அல்லாஹ்வின் கட்டளையைவிட ஷைத்தானின் மனம் கவரும் போதனைதான் (பார்க்க. 7:20, 21) அழகாக, சரியாகப்பட்டது. அல்லாஹ்வின் கட்டளையைப் புறக்கணித்து அல்லாஹ் தடுத்திருந்த மரத்தின் கனியைப் புசித்தார்கள். அதனால் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகித்

தண்டிக்கப்பட்டார்கள். ஆயினும் தனது தவறை உணர்ந்து அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டதால் மன்னிக்கப்பட்டார்கள். (2:37, 7:23) இது நமது ஆதித்தந்தையின் குர்ஆன் கூறும் வரலாறு.

ஆதம்(அலை) அவர்களை ஷைத்தான் தனது சாகச வார்த்தைகளால் மதிமயக்கி இறைவனின் நேரடிக் கட்டளையைப் புறக்கணிக்கச் செய்தது போல், இந்த புரோகித மவ்லவிகளும் ஷைத்தானின் நேரடி ஏஜண்டுகளாக இருந்து கொண்டு தங்களின் வசீகர, சாகச, மயக்கு மொழிகளால் முஸ்லிம்களை மயங்கச் செய்து, அல்குர்ஆனிலுள்ள அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளுக்குச் சுய விளக்கம் கொடுத்து, அதன் மூலம் அல்லாஹ் வின் நேரடிக் கட்டளைகளைப் புறக்கணிக்கச் செய்கிறார்கள். ஷைத்தானும் தனது வழி கேட்டுப் போதனையை ஆதம்(அலை) சரி கண்டு ஏற்கச் செய்ததுபோல், முஸ்லிம்களையும் இந்தப் புரோகித மவ்லவிகளின் வழி கேட்டுப் போதனைகளை சரிகண்டு ஏற்கச் செய்து, அல்லாஹ்வின் நேரடிக் கட்டளைகளான அல்குர்ஆன் வசனங்களை நிராகரித்து தர்கா, தரீக்கா, மத்ஹபு, இயக்கம், அமைப்பு போன்ற வழிகேடுகளில் மூழ்கச் செய்கிறான்.

அல்குர்ஆன் 2:170, 7:3, 33:21,36,66, 67, 68, 59:7 போன்ற எண்ணற்ற வசனங்கள் எடுத்துக்காட்டப்பட்டு அவற்றின் நேரடிக் கருத்துப்படி அவர்கள் அனைவரும் வழிகேட்டிலிருப்பதை உறுதிப்படுத்தும் போது, ஆதம் (அலை) அவர்கள் போல் தங்கள் தவறை உணர்ந்து இறைவனிடம் தவ்பா செய்து மேற்படி தவறுகளிலிருந்து விடுபட்டால் தப்பினார்கள். அதற்கு மாறாக இந்த புரோகித மவ்லவிகளும் அவர்கள் பின்னால் செல்பவர்களும் ஷைத்தானைப் போல் சுய விளக்கம் கொடுத்து இறைவனின் நேரடிக் கட்டளைகளைப் புறக்கணித்தால், அப்படிப்பட்டவர்கள் இறை நேசர்களாக இருக்க முடியுமா? ஷைத்தானின் தோழர்களாக இருக்க முடியுமா? சொல்லுங்கள்.

**அல்குர்ஆன் அல்மாயிதா 5:48 இறைவாக்கை முழுமையாகப் படித்தால் அல்லாஹ்வின் தெளிவான, நேரடியான கட்டளை நன்றாகப் புரிகிறதே! மேலும் அல்குர்ஆன் 5:49-ல் அல்லாஹ் இறக்கி வைத்த(சட்டதிட்டத்)தைக் கொண்டே அவர்களிடையே தீர்ப்புச் செய்வீராக; அவர்களுடைய மன இச்சைகளைப் பின்பற்றாதீர். அல்லாஹ் உம்மீது இறக்கி வைத்ததில் சிலவற்றைவிட்டும் அவர்கள் உம்மைத் திருப்பி விடாதபடி, அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பீராக. (உம்தீர்ப்பை) அவர்கள் புறக்கணித்து விடுவார்களானால், சில பாவங்களின் காரணமாக அவர்களைப் பிடிக்க நிச்சயமாக அல்லாஹ் நாடுகிறான் என்பதை அறிந்து கொள்வீராக; மேலும் நிச்சயமாக மனிதர்களில் பெரும்பாலோர் பாவிகளாகவே இருக்கின்றனர்.** (அல்குர்ஆன் 5:49)

இன்று இந்த மவ்லவிகள் என்ன செய்கிறார்கள்? மக்களின் மனோ இச்சைக்கேற்றவாறு, அல்லாஹ் இறக்கி வைத்த அல்குர்ஆனை புறக்கணித்து சுய விளக்கங்களின் மூலம் அந்த மக்களின் ஆதரவைப் பெற முயல்கிறார் கள். இந்த அக்கிரமம் எதனால் ஏற்படுகிறது? கேவலம் அற்பமான இவ்வுலக வாழ்வுக்குரிய ஆதாரங்களை இந்த மக்களிடம் எதிர்பார்த்து தொண்டை தொழிலாக்கி, மார்க்கத்தை மதமாக்கிப் பிழைப்பு நடத்துவதால்தானே இந்த அநியாயத்திற்கு துணை போகிறார்கள் இந்த மவ்லவிகள். இவர்கள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? ஷைத் தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

அல்குர்ஆன் 16:125-ல் அல்லாஹ் தெளிவாக நேர்வழியில் மக்களை விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைக்கக் கட்டளையிடுகிறான். அவர்களிடத்தில் மிக அழகிய முறையில் விவாதிக்கச் சொல்கிறான். மேலும் நேர்வழியில் வரக்கூடியவர்கள் யார்? மன முரணாக கோணல் வழிகளில் செல்லக்கூடியவர்கள் யார்? என்பதையும் அல்லாஹ்வே அறிகிறான் என்று தெளிவாகக் கூறுகிறான். மவ்லவிகளில் சிலர் என்ன கூறுகிறார்கள்? விவேகத்துடன் என்பதை தந்திரமாக என்று திரித்தும், அழகிய உபதேசம் அல்குர்ஆனாக இருக்க அதிலுள்ள தெளிவான நேரடியான கருத்துக்களை எடுத்து வைக்காமல், அப்படி எடுத்து வைத்தால் அந்த மக்கள் விரண்டு ஓடி விடுவார்கள் என இவர்களாகச் சொல்லிக் கொண்டு, அவற்றின் நேரடிக் கருத்துக்களை வளைத்தும், மறைத்தும் இவர்களின் சுய விளக்கங்களையே மார்க்கமாக மக்களிடம் கூறுகிறார்கள். இறைவனின் தூதரே "எனக்கு இறைவனிட மிருந்து வஹியாக அறிவிக்கப்பட்டதைத் தவிர (வேறு எதையும்) நான் பின்பற்றவில்லை" (6:50) என்று கூறியிருக்க இவர்களின் சுய கற்பனைகளைப் புகுத்துகிற இந்த மவ்லவிகள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

அல்லாஹ் அல்குர்ஆன் 17:89-ல் இந்த குர்ஆனில் மனிதர்களுக்காக சகலவிதமான உதாரணங்களையும் மிகவும் தெளிவாக விவரித்துள்ளதாகவும், அதே சமயம் மனிதர்களில் மிகுதியானவர்கள் இந்த குர்ஆனை நிராகரிக்கிறார்கள் என்று நெற்றிப் பொட்டில் அடிப்பது போல் கூறி இருக்க, இந்த அறிவிப்பைப் புறக்கணித்துவிட்டு, அந்த மிகுதமான வழிகேட்டில் செல்லும் மனிதர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அதாவது அவர்களது மனோ இச்சைக்கு ஏற்றவாறு அல்குர்ஆன் வசனங்களை திரித்து வளைத்து மறைத்து சுயவிளக்கம் கொடுக்கும் இவர்கள் மார்க்க அறிஞர்களா? மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்டிருப்பதால்தானே வழிகேட்டில் செல்லும் பெரும்பாலான மக்களைத் திருப்தி படுத்தும் கட்டாயத்தில் இருக்கிறார்கள். நேர்வழிக்காக ஏங்கித் தவிக்கும் சொற்பமான மக்களைப்

புறக்கணிக்கிறார்கள். 2:159-162 இறைவாக்குகள் இவர்கள் பற்றி என்ன கூறுகிறது? இவர்கள் மார்க்க அறிஞர்கள் தானா? இறைநேசர்கள்தானா? அல்லது மக்களை நரகிற்குக் கூவி கூவி அழைக்கும் (15:39) ஷைத்தானின் தோழர் களா? சொல்லுங்கள்.

5:100, 20:131, 43:33-35 இறைவாக்குகளில் உலக வசதி வாய்ப்புகள் யாருக்காக எதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது? என்று தெள்ளத் தெளிவாகக் கூறி இருக்க, இந்த மவ்லவிகள் அவர்களின் வசதி வாய்ப்பு களிலும், செல்வங்களிலும் மயங்கி, அவர்களின் ஆதரவைப் பெற அதற்கேற்றவாறு அல்குர்ஆனையும் ஹதீஸையும் திரித்து வளைத்து மறைக்கிறார்களே, இவர்கள் மார்க்க அறிஞர்களா? இறைநேசர்களா? ஷைத் தானின் தோழர்களா? சொல்லுங்கள்.

அல்குர்ஆன் 4:26, 27, 28 இறைவாக்குகள் என்ன கூறுகின்றன? ஒட்டுமொத்த மனித வர்க்கத்திற்கும் தன்னுடைய நேர் வழியை-சட்டதிட்டங்களை தெள்ளத் தெளிவாக விளக்கி, நேர்வழி நடந்தவர்களின் நேரான வழியில் செலுத்தவும், பாவமன்னிப்பு அருளவும் விரும்புவதாகக் கூறுகிறான் அல்லாஹ். மனிதன் பலகீனமானவனாகப் படைக்கப்பட்டிருப்பதால், தனது சட்டதிட்டங்களை மிக எளிதாக ஆக்கி இருப்பதாகவே கூறுகிறான். இந்த நிலையில் அல்லாஹ் விளக்கியுள்ளது உங்களுக்கு விளங்காது. அல்லாஹ்வின் தூதர் விளக்கியுள்ளது உங்களுக்கு விளங்காது; நாங்களே உங்களுக்கு மார்க்கத்தை விளக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு, சட்ட விரோதமாக, திருட்டுத் தனமாக, கொல்லைப்புர இடுக்கு வழியாக புகுந்து கொண்டு, இந்த மார்க்க அறிஞர்கள் மிகமிக எளிதாக அல்லாஹ்வால் தரப்பட்ட மார்க்கத்தைக் கடினமாக்கி நேர்வழி நடக்க விரும்பும் நல்லவர்களையும் கோணல் வழிகளில் செல்ல வைப்பவர்கள், அல்லாஹ் 4:27-ல் கூறி இருப்பதுபோல் அதாவது “தங்கள் இச்சைகளைப் பின்பற்றி நடப்பவர்களோ முஸ்லிம்களை நேரான வழியிலிருந்து திருப்பி மீண்டும் பாவத்திலேயே - வழிகேட்டிலேயே முற்றிலும் சாய்த்து விட வேண்டும் என்று விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள்” என்று கூறினால் அதில் தவறுண்டா?

முன்னைய நபிமார்களின் சமுதாயங்களில் புகுந்து கொண்டு அவர்களை வழி கெடுத்து நரகில் தள்ளிக் கொண்டிருக்கும் அந்தப் புரோகிதர்களுக்கும், அதே வழிகேட்டுப் போதனைகளைக் கூறி முஸ்லிம்களை வழிகெடுக்கும் மவ்லவிகள், ஆலிம்கள், அல்லாமாக்கள், மவ்லானாக்கள் என்று தங்களுக்குத் தாங்களே, பெத்தப் பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கும் இந்த முஸ்லிம் மதப்புரோகிதர்களுக்கும் வேறுபாடு உண்டா?

இவர்கள் மார்க்க அறிஞர்களா? இறை நேசர்களா? மாறாக ஷைத்தானின் தோழர்களா? சொல்லுங்கள். இந்த அறிஞர் பெருமக்களுக்கு(?) மார்க்கத்தில் அதிகார முண்டு என்று கூறும் ஒரேயொரு குர்ஆன் வசனத்தைக் காட்டட்டும், ஒரேயொரு ஆதாரபூர் வமான ஹதீஸைக் காட்டட்டும்; நாம் பரிசீலிக்கக் காத்திருக்கிறோம்.

அல்லாஹ் அல்குர்ஆன் 8:29-ல் கூறி இருப்பது போல், யாராக இருந்தாலும், படித்தவரோ படிக்காதவரோ ஆணோ, பெண்ணோ முறையாக அல்லாஹ்வுக்கு அஞ்சியும், அவன்மீது ஆதரவும் வைத்தும் நடந்து கொள்கிறார்களோ அவர்களுக்கு நன்மையையும், தீமையையும் பிரித்தறிந்து, நேர்வழி நடக்கும் ஆற்றலையும், வல்லமையையும், ஞானத்தையும், விவேகத்தையும் அந்த அல்லாஹ்வே தருவதோடு, அப்படிப்பட்டவர்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பதாக அல்லாஹ் வாக்களிக்கிறான். இதைவிட வேறு பாக்கியம் வேண்டுமா? இந்த மவ்லவிகள் பின்னால் செல்ல வேண்டுமா?

ஜமாஅத்தே இஸ்லாமி இயக்கம் தர்கா, தரீக்கா வழிகேடுகளைக் கடுமையாகச் சாடி பிரச்சாரம் செய்தாலும், பெரும்பான்மை மக்களின் ஆதரவை இழக்க நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் ஹிஜ்ரி 400க்குப் பிறகு மனிதர்களால் கற்பனை செய்யப்பட்ட, குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் முரண்பட்ட (பார்க்க 7:3, 33:21, 36,66,67,68, 59:7) மத்ஹபுகளைச் சரிகண்டு செயல்பட்டு வருகிறது என்ற எமது குற்றச்சாட்டு தவறென்றால் அதற்கு உரிய குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை (மனிதக் கற்பனைகளையல்ல) தந்தால் நிச்சயமாக நாம் அதைப் பரிசீலிக்கக் காத்திருக்கிறோம். அன்று நடந்த நிகழ்ச்சியில் இம்ரானா என்ற பாதிக்கப்பட்ட அபலைப் பெண் பற்றிய மார்க்கத் தீர்ப்பு சர்ச்சை எழுந்தபோது, ஒரு சகோதரரின் நியாயமான சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முடியாமல், தலைவர் தடுமாறியதும், கேள்வி கேட்ட சகோதரர் தலைவரின் பதிலில் திருப்தியுறாமல் மீண்டும், மீண்டும் கடுமையாக கேள்விக் கணைகளைத் தொடுத்ததும், தலைவர் மத்ஹபு அடிப்படையில் தமது பதிலை மீண்டும், மீண்டும் சொல்லிக்க கொண்டிருந்ததால்தான் என்பதை மறுக்க முடியுமா? ஆக மத்ஹபுகள் பற்றி ஜமாஅத்தே இஸ்லாமியின் கொள்கையை மீள் பரிசீலனை செய்யும் கட்டாயத்தில் ஜமாஅத்தே இஸ்லாமி இயக்கம் இருக்கிறது என்பதை தலைவரின் ஆழ்ந்த சிந்தனைக்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல் இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் அனைத்து வகை வீழ்ச்சிக்கும் மாற்றார்கள் குறிப்பாக முஸ்லிம் விரோதிகள் முஸ்லிம்களை தீவிரவாதிகள், வன்முறையாளர்கள், சகிப்புத் தன்மையற்றவர்கள். இஸ்லாமிய தீவிரவாதம், முஸ்லிம் தீவிரவாதி என்றெல்லாம் இழித்தும், பழித்தும் பேசுவதற்கு வித்திட்டுக் கொடுத்தவர்களே இந்த

மவ்லவி புரோகிதர்களே! ஜிஹாதிற்கும், தற்கொலைப்படைத் தாக்குதல்களுக்கும் தவறான பொருள்களை கற்பித்து முஸ்லிம் இளைஞர்களை தவறான வழியில் இட்டுச் செல்வதே அடிப்படைக் காரணமாகும்.

ஆக எந்தக் கோணத்தில் ஆராய்ந்தாலும் இன்றைய முஸ்லிம்கள் சந்தித்து வரும் அனைத்து வகை இடர்பாடுகளுக்கும், அவமரியாதைகளுக்கும் உயிர், பொருள், கற்பு நஷ்டத்திற்கும் இந்த புரோகித மவ்லவிகளின் தவறான அணுகுமுறையேயாகும். விலாசமே இல்லாதிருந்த பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். வகையறாக்களை பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் குர்ஆன், ஹதீஸ் போதனைக்கு முரணாக இனவெறிக்கொண்டு முஸ்லிம்களை செயல்பட வைத்து, அவர்கள் மத்தியிலும், மாநிலங்களிலும் ஆட்சியில் அமர்ந்து இந்தியாவின் பிரதான சக்தியாக மாறி, ஆட்சியிலும், அரசியல் அமைப்புச் சட்டங்களிலும் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலைகளை அமைத்துக் கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செலுத்த வழியமைத்துக் கொடுத்ததே இந்தப் புரோகித மவ்லவிகளின் குர்ஆன், ஹதீஸுக்கு முரணான முஸ்லிம்களின் மனோ இச்சைக்கு ஏற்ற இனவெறியைத் தூண்டும் போதனைகளே என்பதை மறுக்க முடியுமா?

இப்படி இன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் அனைத்து வகை வீழ்ச்சிகளுக்கும், துன்பங்களுக்கும், வேதனை களுக்கும், அடிப்படைக் காரணம், குர்ஆன், ஹதீஸில் ஒரு சிறிதளவேனும் அனுமதியே இல்லாத தங்களை ஹஜ்ரத்கள், மவ்லவிகள், மவ்லானாக்கள், அல்லாமாக்கள் என்று பீற்றிக் கொள்ளும் மவ்லவிகள் சட்டவிரோதமாக, திருட்டுத்தனமாக, கொல்லைப்புற இடுக்கு வழியரக நுழைந்து கொண்டு இந்த முஸ்லிம் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தி குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் முரண்பட்டவற்றை இஸ்லாத்தின் பெயரால் மக்களுக்கு போதித்து, அவற்றை முஸ்லிம்கள் நம்பி அதன்படி செயல்படுவதேயாகும் எனக் குற்றப்படுத்துகிறேன்.

இவ்வுலகில் மட்டுமல்ல; மறு உலகிலும் இந்த முஸ்லிம் சமுதாயம் அல்லாஹ் அல்குர்ஆன் 25:30, 33:36, 66,67,68 இன்னும் இவைபோல் பல இடங்களில் சுட்டிக் காட்டுவதுபோல் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி நரகில் வீழ்ந்து வேதனை தாங்க இயலாது கதறும் நிலைக்கும் இந்த மவ்லவிகளின் துர்போதனைகளே காரணம் என்பதை மறுக்க முடியுமா?

அல்லாஹ், ஆல இம்ரான் 3:139, மற்றும் அந்நூர் 24:55 இரண்டு இடங்களில் வாக்களித்திருப்பது போல், முஸ்லிம்களைப் பீடித்துள்ள அச்சம், கவலை, துக்கம், அமைதி இன்மை, இழிவு, கேவலம், வீழ்ச்சி இவை அனைத்தி லிருந்தும் விடுபட்டு, சந்தோசம், அமைதி, சுபீட்சம் என இம்மை மறுமையின் அனைத்து வளங்களையும் பெறுவதோடு, முஸ்லிம்கள் இழந்துவிட்ட ஆட்சி அதிகாரத்தையும் மீண்டும் பெறுவதாக இருந்தால், அவர்களை நிச்சயமாக, இந்த ஏமாற்றி வஞ்சித்து சுரண்டிப் பிழைக்கும் புரோகித மவ்லவிகளிடமிருந்து, அவர்களின் வஸீகர, மாய உடும்புப் பிடியிலிருந்து விடுவித்தேயாக வேண்டும்.

புரோகிதர்களின் பிடியில் முஸ்லிம்கள் சிக்கி இருக்கும் காலமெல்லாம் அவர்களுக்கு இம்மை மறுமைக்குரிய ஈடேற்றம் என்பது கானல் நீர்தான். அது ஒருபோதும் சாத்தியமில்லை. இறைத்தூதர்கள் அனைவருமே, மார்க்கத்தை மதமாக்கி, தொண்டை தொழிலாக்கி அது கொண்டு பிழைப்பு நடத்திய புரோகித வர்க்கத்தினரிடமிருந்து, மக்களை விடுவிக்கும் பெரும் முயற்சியையே தங்களின் தலையாய பணியாகக் கொண்டிருந்தார்கள். அப்போதுதான் தூய மார்க்கம் அல்லாஹ்வுக்கென்றே ஆகும். அவனது கட்டளைகள் நிலைநாட்டப்படும். இறையாட்சி சாத்தியப்படும் என்பதைத் தெளிவாக விளங்கிச் செயல்பட்டார்கள்.

அல்லாஹ்வின் அருளால் நபிமார்களின் ஓரளவு வெற்றியடைந்தவர்களும் உண்டு; ஒரு சிலரை மட்டும் நேர்வழிக்குக் கொண்டு வந்தவர்களும் உண்டு. ஓரிருவரை மட்டும் நேர்வழிக்குக் கொண்டு வந்தவர்களும் உண்டு; ஒருவரைக் கூட நேர்வழிக்கு கொண்டு வரமுடியாமல் தன்னந்தனியாக சுவர்க்கம் செல்வோரும் உண்டு.

ஒருவரைக் கூட நேரவழிக்குக் கொண்டுவர முடியாத நபிமார்களுக்கும் அல்லாஹ் சுவர்க்கம் புக அனுமதி கொடுத்த காரணம் அவர்கள், அல்லாஹ் அவர்களுக்கு வஹீ மூலம் அறிவித்ததை அப்படியே கூடுதல் குறைவு இல்லாமல் மக்களிடம் எடுத்து வைத்ததேயாகும். மக்களைக் கவர்ந்து கூட்டத்தைச் சேர்க்க அவர்கள் எவ்வித தந்திரங்களையும் கையாளவில்லை. அல்லாஹ்வின் அறிவிப்புகளில் தங்களின் சுய கருத்துக்களைப் புகுத்த வில்லை. அது தங்களை அல்லாஹ்வின் கடுமையான கோபத்திற்கு ஆளாக்கும் என்பதைத் தெளிவாக அறிந்து வைத்திருந்தார்கள். அவர்கள் மக்களிடம் கூலியை எதிர்பார்த்து மார்க்கப் பணி புரியவில்லை. எனவே மக்களின் ஆதரவையோ, அவர்களில் பெருங்கூட்டத்தையோ எதிர்பார்த்து அல்லாஹ்வின் அறிவிப்புகளை திரித்து வளைத்து மறைக்க முற்படவில்லை.

அல்லாஹ் அறிவித்ததை ஒளிவு மறைவின்றி அப்படியே மக்களுக்கு அறிவித்தார்கள். தங்களுக்கு இடப்பட்ட பணியில் சிறிதும் குறை செய்யவில்லை. எனவே அவர்களின் முயற்சியில் ஒரு நபரைக் கூட நேர்வழிக்குக் கொண்டுவர முடியாவிட்டாலும், அவர்களைப் பொருந்திக் கொண்டு சுவர்க்கத்தில் அல்லாஹ் நுழையச் செய்கிறான்.

இது இன்றைய மார்க்கப் பணியாளர்களுக்கு நல்லதொரு முன் உதாரணமாகும். அல்குர்ஆனிலும், ஆதாரபூர்வமான ஹதீஸ்களிலும் இருப்பதை உள்ளது உள்ளபடி மக்களிடம் எடுத்து வைப்பதே நமது கடமையாகும். அல்லாஹ் 51:55-ல் கூறி இருப்பதுபோல், உண்மை விசுவாசிகளுக்கு நிச்சயமாக அது உரிய பலனைத்தரும். நமது முயற்சியில் ஒரு நபர் கூட சத்திய வழிக்கு வராவிட்டாலும், அதற்காக அல்லாஹ் நம்மைக் குற்றம் பிடிக்கமாட்டான். நமக்கு அல்லாஹ்வின் பொருத்தம் நிச்சயம் கிடைக்கும். சுவர்க்கமும் கிடைக்கும்.

அதற்கு மாறாக குர்ஆன், ஹதீஸில் உள்ளதை உள்ளபடி சொன்னால், அதிகமான மக்கள் ஏற்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில், அந்த அதிகமான மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில், அல்குர்ஆன், ஹதீஸில் இருப்பதை நமது சுய கருத்துக்களைச் சொல்லி மறைத்தாலோ, திரித்து வளைத்துச் சொன்னாலோ அது வழிகேடேயாகும். அப்படிச் செய்வதால் உலகில் பெருங்கூட்டம் நம் பின்னால் வந்தாலும், அது நமக்கு அசலான வெற்றியைப் பெற்றுத் தராது. அந்தப் பெருங் கூட்டத்தோடு நரகம் புக நேரிடும் என்பதையே அல்குர்ஆனின் பல இறைவாக்குகள் கடுமையாக எச்சரிக்கின்றன. ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு உலகில் எல்லாவிதமான வசதி வாய்ப்புகள், பேர், புகழ், செல்வம், செல்வாக்கு இவை அனைத்தும் தாராளமாகக் கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதையும் பல அல்குர்ஆன் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

முஸ்லிம் மத குருமார்கள் முஸ்லிம்களை நேர்வழியில்தான் அழைத்துச் செல்கிறார்கள் என்று முஸ்லிம்கள் நம்புவது சரி என்றால், அதுபோல் ஹிந்து மத குருமார்கள் ஹிந்துக்களை நேர்வழியில்தான் அழைத்துச் செல்கிறார்கள் என்று ஹிந்துக்கள் நம்புவதும் சரிதான்; கிறிஸ்தவ மத குருமார்கள் கிறிஸ்தவர்களை நேர்வழியில்தான் அழைத்துச் செல்கிறார்கள் என்று கிறிஸ்தவர்கள் நம்புவதும் சரிதான், இப்படியே ஒவ்வொரு மதத்தின் மதகுருமாரும் அந்தந்த மத மக்களை நேர்வழியில்தான் அழைத்துச் செல்கிறார்கள் என்று அந்தந்த மத மக்கள் நம்புவதும் சரிதான் என்றே ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஆனால் ஒவ்வொரு மதத்தின் மத குருமாரும் தாங்கள்தான் மக்களை நேர்வழியில் அழைத்துச் செல்வதாகவும், மற்ற மதங்களின் மத குருமார்கள் அந்த மக்களை தவறான வழிகளில்-கோணல் வழிகளில் அழைத்துச் செல்கிறார்கள் என்றே கூறிக் கொள்கிறார்கள். ஆனால் அனைத்து மக்களுக்கும் ஒரே இறைவனான அல்லாஹ் இறக்கியருளிய வழிகாட்டு நூல்களில் அல்குர்ஆனைத்தவிர எஞ்சியவை அனைத்தும் இந்தப் புரோகிதர்களின் கரம் பட்டு அவற்றின் பரிசுத்தத் தன்மையை இழந்துவிட்டன என்பதை நடுநிலையாளர்களில் யாரும் மறுக்க மாட்டார்கள்.

மனிதக் கரம் படாமல் மிகமிகத் தூய்மையாக இருக்கும் அல்குர்ஆனில் உரசிப் பார்க்கும்போது, எப்படி மற்ற மதங்கள் புரோகிதர்களால் கற்பனை செய்யப்படவை; இறைவன் அருளியவை அல்ல என்பது உறுதிப்படுகிறதோ அதேபோல் இந்த முஸ்லிம் மதப்புரோகிதர்கள் போதிப்பவற்றையும் அதே அல்குர்ஆனில் உரசிப் பார்க்கும்போது, அதுவும் இந்த முஸ்லிம் மதப்புரோகிதர்களால் கற்பனை செய்யப்பட்டவை, நேர்வழி அல்ல என்பது உறுதியாகத் தெரிகிறதே! இவர்களை சரி கண்டு ஏற்கலாமா?

எமது இந்த கூற்றில் உங்களுக்கு மாற்றுக்கருத்து இருந்தால் அதற்குரிய குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களைத் தாருங்கள். அல்லாஹ்வுக்கு வழிபட்டு அவனது கட்டளைப்படி நடக்க வேண்டும் என்று பல இறைவாக்குகள் இருக்கின்றன. நபி(ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டு, அவர்களின் கட்டளைப்படி நடக்க வேண்டும் என்றும் பல இறைக் கட்டளைகள் அல்குர்ஆனில் இருக்கின்றன. மனிதர்களில் அமீர்களுக்கு குர்ஆன், ஹதீஸுக்கு உட்பட்டு கட்டுப்பட வேண்டும் என்று குறைந்தது ஒரு இறைவாக்காவது (4:59) இருக்கின்றது. இதுபோல் இந்த மார்க்க அறிஞர்களுக்கு கட்டுப்பட்டு அவர்களின் சுய கருத்துக்களை எடுத்து நடக்க வேண்டும் என்று கூறும் ஒரேயொரு குர்ஆன் வசனத்தைக் காட்டுங்கள்; குறைந்தது ஒரேயொரு ஆதாரபூர்வமான ஹதீஸைக் காட்டுங்கள். இந்தப் புரோகித மவ்லவிகளின் முன்னோர்கள் கற்பனை செய்து இட்டுக்கட்டிய பல பலவீனமான, இட்டுக்கட்டப்பட்ட

ஹதீஸ்கள் இருப்பதை நாமும் அறிவோம். அவை நமக்குத் தேவையில்லை. குர்ஆன் வசனத்தையோ ஆதாரபூர்வமான ஹதீஸையோ மட்டும்தான் கேட்கிறோம்.

மேலே நாம் கூறியுள்ள கருத்துக்கள் மார்க்க அறிஞர்கள் என்போர் தங்களின் சுய, யூகக் கருத்துக்களை மார்க்கமாகக் கூறுவதுபோல், எமது சொந்த சுய, யூகக் கருத்துக்களாக இருந்தால் அவற்றிற்கு எவ்வித மதிப்பும் இல்லை. அவற்றை நீங்கள் புறக்கணித்துத் தூக்கி எறிந்து விடலாம். அதற்கு மாறாக நாம் எடுத்து எழுதியுள்ளவை, இறைவனின் இறுதி வழிகாட்டல் நூல் அல்குர்ஆனின் நேரடிக் கருத்துக்களாக இருந்தால் அவை அல்லாஹ்வின் கட்டளைகள் என்பதை நீங்களும் மறுக்க முடியாது.

அப்படியானால் அந்தக் கருத்துக்களை நமது அறிவும், மனமும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவற்றை அப்படியே செயல்படுத்துவது நமது கட்டாயக் கடமை என்பதை உண்மை விசுவாசிகள் யாருமே மறுக்கமாட்டார்கள். அல்லாஹ்வின் நேசரான இப்ராஹீம்(அலை) அவர்கள் நீண்ட காலம் குழந்தை இல்லாமல் தவித்திருந்து பெற்ற அருமைக் குழந்தை இஸ்மாயீல்(அலை) அவர்களையும், அவரது தாயாரையும் புல், பூண்டு, பயிர், பட்சி முதல் எதுவுமே இல்லாத தண்ணீர் இல்லாத, மனித சஞ்சாரமே இல்லாத பொட்டல் காட்டில், வனாந்தரத்தில் கொண்டுவிடச் சொல்லி, அல்லாஹ்வின் கட்டளை வந்தபோது, அந்தக் கட்டளையை இப்றாஹீம்(அலை) அவர்களின் அறிவும், மனமும் ஏற்றா அக்கட்டளைப்படி செயல்பட்டார்கள்.

அதேபோல் அக்குழந்தை வளர்ந்து துள்ளித்திரியும் பருவத்தில், அதனை அறுத்துப் பலியிட, அல்லாஹ்வின் கட்டளை வந்தபோது, அக்கட்டளையை அவர்களின் அறிவும், மனமும் சரிகண்டா அதனை நிறைவேற்றத் துணிந்தார்கள். இல்லை! இறைவனது கட்டளைகளை நமது அறிவு சரி காணாவிட்டாலும், மனம் விரும்பாவிட்டாலும், உலகமே அதை அநீதி என்று சொன்னாலும், அல்லாஹ் நமது எஜமானன், நாம் அவனது அடிமைகள்; எனவே எஜமானனின் கட்டளைகளை அடிமைகள் மீறமுடியாது என்ற மறுக்க முடியாத உண்மையின் அடிப்படையிலேயே இப்ராஹீம்(அலை) செயல்பட்டார்கள். அதுபோல் அல்குர்ஆனிலுள்ள கட்டளைகளை நமது அறிவு சரி காணாவிட்டாலும், நடைமுறை சாத்தியமில்லை என்று அறிவு சொன்னாலும், மனம் சிறிதும் விரும்பாவிட்டாலும், அந்த இறைவனது கட்டளைகளை சிறிதும் மாற்றமின்றி அப்படியே நிறைவேற்றுவதுதான் இறைவனின் அடிமைகளாகிய நம்முடைய நீங்காக் கடமையாக இருக்கிறது.

வழிகேட்டில் சென்று நரகை அடையும் துர்பாக்கியர்கள் மட்டுமே அல்குர்ஆனிலுள்ள இறைவாக்குகளுக்கு, இறைக் கட்டளைகளுக்கு சுய விளக்கம் கொடுத்து அவற்றைப் புறக்கணிக்கத் துணிவார்கள் என்பதை இந்த இடத்தில் உங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சரியான நேரான முடிவுக்கு வரும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

இந்த எமது கருத்துக்களை மொழிபெயர்த்து தலைவருக்கு அனுப்பி அவரது பெறுமதி வாய்ந்த குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலான கருத்தைப் பெற்றுத்தருமாறு மிக தயவுடன் வேண்டுகிறேன். ஆக இந்த எமது கருத்துக்களை தமிழக மற்றும் பாண்டிச்சேரி தலைவராகிய உங்களிடம் சேர்த்துவிட்டோம் என்பதற்கு நாளை மறுமையில் நீங்களே சாட்சியாக இருக்கிறீர்கள் எனக் கூறி முடிக்கிறேன். பிறபின். வஸ்ஸலாம்.

இப்படிக்கு,

அபூ அப்தில்லாஹ்

அந்நஜாத் ஆசிரியர்.